சாட்சிகள் வாக்குமூலம்

பாகம் 111 சுற்றறிக்கை உத்தரவு 2(11) உவிமுச பிரிவு 1 மற்றும் 2

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.

அ.வ.எண்.89/2022

வாக்குமூலம்: வா.சா.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : காளிமுத்து | த/பெ. | : மயில்சாமி |
| கிராமம் | : | வேலை | : |
| வட்டம் | : | வயது | : |
| மாவட்டம் | : | நாள் | : 27.06.2023 |

1973ம் வருடத்திய வரைமுறைச் சட்டம் பிரிவு 10ன்படி சாட்சி அழைக்கப்பட்டு அங்ஙனமே உள்ளார்ந்த உறுதி உரை செய்யப்பட்டு 2023ம் ஆண்டு ஜூன் மாதம் 27–ம் நாள் அளித்த சாட்சியம்.

<u>முதல் விசாரணை:</u> என்னுடைய முதல் விசாரணையை சத்தியப்பிரமான நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். முதல் நிரூபண பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விசயங்கள் எல்லாம் என்னால் சொல்லப்பட்டவைதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான்தான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். 04.03.2004ம் தேதியிட்ட தமிழ்நாடு அரசு வாதிக்கு வழங்கிய நில ஒப்படைப்பு ஆவணம் அசல் வா.சா.ஆ.1. 05.07.2022ம் தேதியிட்ட வாதி பெயரில் உள்ள கணினி சிட்டா வா.சா.ஆ.2. அடங்கல் வா.சா.ஆ.3. 13.07.2022ம் தேதியிட்ட 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள கணினி சிட்டா வா.சா.ஆ.4. 13.07.2022ம் தேதியிட்ட பழனிச்சாமி பெயரில் உள்ள கணினி சிட்டா வா.சா.ஆ.5. வாதியின் தகப்பனார் மயில்சாமி பெயரில் உள்ள கணினி சிட்டா வா.சா.ஆ.6. 03.12.2021ம் தேதியிட்ட பழனி வருவாய் கோட்டாட்சியரின் குறிப்பாணை நகல் வா.சா.ஆ.7. 08.06.2022ம் தேதியிட்ட பழனி வட்டாட்சியருக்கு கணினி வழியில் அளிதத மனுவின் நகல் வா.சா.ஆ.8. 31.05.2022ம் தேதி பழனி அரசு மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி வா.சா.ஆ.9. மாதிரி வரைபடம் வா.சா.ஆ.10 ஆகியவை தாக்கல் செய்கிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(குறுக்கு விசாரைணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)

N GNANASAMBANDAM

Digitally signed by N GNANASAMBANDAM
Date: 2023.06.27 17:52:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பழனி.